**கவனிக்க.-** *2024.07.12 ஆந் திகதிய 2393 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2394 - 2024 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2024.07.19

*2394 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 686 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, ஒகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


685 - B82591 - 5,403(2024/07)

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாண பொதுச் சேவையின் சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைப் பிரிவில் உயிரி மருத்துவப் பொறியியலாளர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2024 (திறந்த)

மேல் மாகாண பொதுச் சேவையின் சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை பிரிவில் உள்ள உயிரி மருத்துவப் பொறியியலாளர் தரம் III பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகுதிகளை கொண்டுள்ள மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பளத் திட்டம் :**

சம்பள குறியீட்டு இலக்கம் SL - 1 2016 மேலும் இந்தப் பதவிக்கான மாதச் சம்பளம் அ.நி.சு.03/2016 இற்கு இணங்க ரூ. 47,615 - 10 x 1335 - 8 x 1630 - 17 x 2170 - ரூ. 110,895.00 ( 01 ஆவது சம்பள மட்டம்)

**03. சேவை நிபந்தனைகள் :**

(i) இந்த பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும், உங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான முடிவுக்கு நீங்கள் உட்பட்டாக வேண்டும்.

(ii) இந்தப் பதவி ஆட்சேர்ப்புக்கு தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள், நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று வருட நன்னடத்தைக் காலத்துக்கு உட்பட்டு இந்த சேவைக்கு நியமிக்கப்படுவார்கள்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின், உயிரி மருத்துவ பொறியியலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு ஒழுங்கு முறை மற்றும் சேவை ஒழுங்கு முறையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை மற்றும் மேல் மாகாண சபை பொதுச் சேவையின் நடைமுறை பிரமாணம், மேல் மாகாண சபையின் நிதி விதிகளின் கோவை, மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநரால் வெளியிடப்பட்ட ஒழுங்கு முறைகள் மற்றும் உத்தரவுகள், மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் பிரமாணங்கள், ஒழுங்குமுறைகள் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் விதிகளுக்கிணங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**04. வெற்றிடங்கள் காணப்படும் துறைகள் :**

உயிரி மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் 02 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

4.1 விண்ணப்பங்களைப் பொறுப்பபேற்கும் இறுதித் திகதி 2024.08.20 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளும் 2024.08.20 ஆந் திகதி அல்லது அத் தினத்திற்கு முன் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**05. தகைமை :**

**5.1 கல்வித் தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல்/ எலக்ட்ரிக்கல் / இயந்திரப் பொறியியல் /உயிரி மருத்துவப் பொறியாளர் பட்டம் பெற்றிருத்தல்.

**5.2 அனுபவம்**

உயிரி மருத்துவப் பொறியியலாளர், மருத்துவப் பொறியாளர் அல்லது மருத்துவ விஞ்ஞானியாக அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில், நியதிச் சட்ட சபை அல்லது தனியார் துறையில் அனுபவம் பெற்றிருப்பது விசேட தகுதியாகக் கருதப்படும்.

**5.3 உடல் தகுதிகள்**

ஒவ்வொரு வேட்பாளரும் மேல் மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5.4 வேறு தகைமை**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்னர் குறைந்தபட்சம் 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

iii. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் 2024.08.20 ஆம் திகதியில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் நல்ல பண்புள்ளவராக இருக்க வேண்டும்.

**06. வயதெல்லை :**

குறைந்தபட்ச வயது எல்லை : 21 ஆண்டுகள்
அதிகபட்ச வயது எல்லை : 35 ஆண்டுகள்

**07. ஆட்சேர்ப்பு முறை**

பொது நேர்முகப் பரீட்சை - பொது நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமை மட்டும் பரிசோதித்துப் பார்ப்பது இடம் பெறும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற மதிப்பெண்களின் தகுதியின் அடிப்படையில் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த பதவிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

பொதுவான நேர்முகப் பரீட்சையில் அடிப்படை தகைமைகள் பரிசீலிக்கப்படுதல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது இடம்பெறும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் துறை மற்றும் புள்ளிகளின் எண்ணிக்கை.

| பரிசோதித்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | தெரிவு செய்வதற்காக கருத்தில் கொள்ளப்படும் உச்சமான புள்ளிகள் |
|---|---|---|
| i. மேலதிக பட்டப் பின் படிப்பு கல்வித் தகைமைகள்<br>a. ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் / மின்சார / இயந்திரப் பொறியியல் / உயிர் விஞ்ஞான பொறியியல் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - 15<br>b. மருத்துவப் பொறியியல் / மருத்துவ மின்னணுவியல் / மருத்துவ தொழில்நுட்ப முகாமைத்துவம் / மருத்துவ இயற்பியல் ஆகியவற்றில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா- 15 | 30 | |
| ii. அனுபவம்<br>அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை, நியதிச் சட்ட சபை அல்லது தனியார் துறையில் உயிரி மருத்துவ பொறியியலாளர் அல்லது மருத்துவ விஞ்ஞானியாக பணியாற்றியதற்கு வருடத்திற்கு 05 மதிப்பெண்கள் வீதம் அதிகபட்சம் 08 வருடங்களுக்காக | 40 | உரியதன்று |
| iii. துறை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்<br>ஒரு ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டிற்கு 05 மதிப்பெண்கள் (இலத்திரனியல் / எலக்ட்ரிக்கல் / இயந்திரப் பொறியியல்/ உயிரி மருத்துவ பொறியியல் ) வெளியிடப்பட்ட (புத்தகப் பதிப்பகத்திலிருந்து ஒரு எண்ணைப் பெற்றது / அங்கீகரிக்கப்பட்ட இதழில் வெளியிடப்பட்டது கொள்கை ஆசிரியராக) ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் (அதிக பட்சம் 25 புள்ளிகள்) | 25 | |
| iv. நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**08. விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இந்த அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி தாளின் இருபுறமும் பயன்படுத்தி A4 அளவு தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தில் தெளிவாக நிரப்ப வேண்டும். முதல் பக்கத்தில் பந்திகள் இலக்கம் 01 முதல் 04 வரையிலும், மற்றை பக்கங்களில் இலக்கம் 04 முதல் பந்திகள் இடம் பெறும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட மாதிரி வடிவத்திற்கு இணங்காத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும் விண்ணப்பத்தை சரியாக பூர்த்தி செய்யாததால் ஏற்படும் பாதிப்பை விண்ணப்பதாரர்கள் ஏற்க வேண்டும். விண்ணப்பத்தின் நகல் பிரதி ஒன்றினை வைத்திருப்பது உதவியாக இருக்கும்.

8.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2024.08.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, இல. 628, 10வது மாடி, ஜன ஜெய நகர கட்டடம், நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மேல் மாகாண சபை பொதுச் சேவையின் உயிரி மருத்துவ பொறியியலாளர் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு - 2024 (திறந்த)' என்று தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது மேலும் உரிய திகதிக்குப் பிறகு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் மற்றும் தகைமையற்ற அல்லது பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும்.

8.3 நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்பட்டவுடன், மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk இல் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 07 நாட்களுக்குப் பின்னரும் அந்த கடிதங்கள் கிடைக்கப்பெறவில்லையென்றால், அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி மேல் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் கோரிய அறிவிப்பின் பெயர் ஆகியவற்றுடன் நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நகல் பிரதி மற்றும் விண்ணப்பத்தின் பதிவுக்கான பற்றுச் சீட்டு ஆகியவற்றுடன் மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் வினவ வேண்டும்.

8.4 விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிக்குரிய அதிகாரமுள்ள அலுவலகர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் (ரூ 498,960.00 இற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலகர்,) பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலகர்களின் ஒப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் உரிய திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

**09. அபேட்சகரின் அடையாளம்:**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது தோன்றும் ஒவ்வொரு நேர்முகப் பரீட்சை சபை திருப்தி அடையும் வகையில் தங்களின் அடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் நிருபிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை நிருபிக்க பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
(ii) குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

**10. தவறான தகவல் சமர்ப்பிப்பு :**

நேர்முகப் பரீட்சைக்கு முன்போ அல்லது நேர்முகப் பரீட்சையின் போது அல்லது நேர்முகப் பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்த நேரத்திலும் ஒரு அபேட்சகர் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், அவரது அபேட்சகருக்குரிய அங்கத்துவம் இரத்து செய்யப்படலாம் அல்லது அவர்/அவள் ஏதேனும் முக்கியமான விடயத்தை வேண்டுமென்றே மறைத்து வைத்திருந்தால், அவர்/அவள் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம். இது சம்பந்தமாக, மேல் மாகாண பொதுச் சேவை நடைமுறை ஒழுங்குவிதிகள் பிரிவு 47 இன் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**11.** இந்த நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர் உள்ளிட்ட ஆவணம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் www.psc.wp.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் .

**12.** இந்த விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் வெளியிடப்பட்ட /வெளியிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவு மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

**13.** இந்த அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள, இந்த அறிவித்தலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு மற்றும் உரிய தினம் அல்லது அதற்கு முன் விண்ணப்பத்தினை முன்வைத்தவர்களுக்கு உரிய தகுதிகளை பூர்த்தி செய்துள்ளனர் எனக் கருதி விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பமளிக்கப்படும் அனைத்து வகையிலும் முழுமையடையாத விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த அல்லது கால தாமதமாகிய விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. ஒரு வேட்பாளருக்கு நேர் முகப் பரீட்சை அனுமதி அட்டையை வழங்குவது, அவர் பதவிக்கு தகுதி பெற்றதற்கான சேர்க்கையாக கருதப்படாது. நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பது அவர் இந்தப் பதவிக்கு தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படக் கூடாது.

14. இந்த விளம்பரம் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

மேல் மாகாணம்,
2024, யூலை 17.

**மேல் மாகாண பொதுச் சேவையின் சுகாதாரத் திணைக்களத்தின்**
**நிறைவேற்றுச் சேவை பிரிவில் உயிரி மருத்துவப் பொறியியலாளர் தரம் III**
**பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2024**

1.1 முதலெழுத்துடன் பெயர் : ..............................................................
1.2 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ..............................................................
1.3 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ) : ..............................................................
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................................................

02.
2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) : ..............................................................
..............................................................
2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................
..............................................................
2.3 நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி : ..............................................................
..............................................................
2.4 தொலைபேசி இலக்கம்: ..............................................................

03.
3.1 நிரந்தர வதிவிடத்தின் மாவட்டம் - (உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக)

கொழும்பு ☐ கம்பஹா ☐ களுத்துறை ☐

3.2 விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் தினமான 2024.08.20 ஆந் திகதியில் உரிய மாவட்டத்தின் நிரந்தர வதிவிடம் -

வருடம் : ☐ மாதம் : ☐ நாள் : ☐

3.3 பிறந்த திகதி : வருடம் : ☐ மாதம் : ☐ நாள் : ☐

3.4 விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் தினமான 2024.08.20 ஆந் திகதியில் வயது -

வருடம் : ☐ மாதம் : ☐ நாள் : ☐

3.5 பெண் /ஆண் - (உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக)

பெண் : ☐ ஆண் : ☐

04.

**தகைமை** :(விண்ணப்பம் கோரும் 05 அறிவிப்புக்கிணங்க வேண்டுகோள் விடுக்கும் பதவிக்குரிய தகைமை காட்டப்பட வேண்டியதுடன் உண்மைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

4.1 கல்வித் தகைமை :

(i) பயின்றுள்ள பட்டம் : ..........................................................................................................................
(ii) பயின்ற பாடங்கள்: ..........................................................................................................................
(iii) பல்கலைக்கழகம் : ..........................................................................................................................
(iv) சித்தி : ..........................................................................................................................
(v) சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி : ..........................................................................................................................
(vi) அனுபவம்

| தாபனத்தின் பெயர்<br>(அரசாங்க /மாகாண அரசாங்க /நியதிச் சட்ட சபை/வேறு தனியார் தாபனம்) | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

05. .................................................................................. ஆகிய என்னால் இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்று சான்றளிக்கிறேன். நான் வழங்கிய தகவல்கள் தவறானவை என கண்டறியப்பட்டால், விண்ணப்பித்த பதவிக்குரிய நியமனத்திற்கான எனது தகுதி புறக்கணிக்கப்படலாம் மற்றும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை நான் நன்கு அறிவேன். நேர்முகப்பரீட்சை நடத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

..................................................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்

திகதி : ......................................

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றளித்தல்**
**(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி .............................................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர்......................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன், அவர் என்னைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துவரின் பெயர் : ..............................................................................................

கையொப்பம் : .............................................................

பதவி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை : .............................................................

(இந்தச் சான்றளிப்பு அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி, ரூ.240,360.00 இற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையின் அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.)

தற்போது அரசாங்க அல்லது மாகாண பொதுச் சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரினது சான்றிதழ்
(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுங்கள்)

திரு./ திருமதி/ செல்வி................................................................................ அவர்கள் ................................................................ ............................................................ அமைச்சு/ திணைக்களம்/ தாபனத்தில் ................................................................. ஆக ஒரு ஓய்வூதியமுள்ள பதவியில் பணியாற்றுகிறார் எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் எண்ணம் இல்லை எனவும், மேற்கண்ட தகவல்கள் சரியானவை என்று சான்றளிப்பதுடன், மேலும் இந்தத் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் அவர் நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்க முடியும் என்பதனை பரிந்துரைக்கின்றேன்.

........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரை).

திகதி : ................................................
சான்றுப்படுத்தும் அலுவலகரின் பெயர் : ................................................
பதவி : ................................................
முகவரி : ................................................

07 - 658